7. அரசினர் தீர்மானங்கள்—*தொடர்ச்சி*

(ஆ) உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்களைப் பேரவைப் பணிகளினின்று கூட்டத் தொடர் முழுவதும் தற்காலிகமாக நீக்கி வைத்ததை மூன்று நாட்களாகக் குறைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்களை இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் நீக்கி வைக்கபெறலாம் என்று நம்முடைய பேரவை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய வேண்டுகோளின்படி, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள் 9–1–2020 வரை அதாவது கவர்னர் உரை கூட்டம் முடியும் வரை இன்றிலிருந்து 3 நாட்களுக்கு பேரவைப் பணிகளினின்று நீக்கி வைக்கப்பெறலாம்" என்ற தீர்மானத்தை, "அவருடைய தண்டனைக் காலத்தைக் கூட்டத்தொடர் முழுவதும் நீக்கி வைக்க வேண்டுமென்பதைக் குறைத்து 9–1–2020 வரை இன்றிலிருந்து 3 நாட்களுக்கு மட்டும் பேரவைப் பணிகளினின்று நீக்கி வைக்கப் பெறலாம்" என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.*

பிற்பகல் 2–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் மற்றும் துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

திரு. ஜெ. அன்பழகன் அவர்கள் 9–1–2020 வரை மட்டும் பேரவைப் பணிகளினின்று நீக்கி வைக்கப்படுகிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2020 ஜனவரி 7] [பேரவைத் தலைவர்]

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் பிற்பகல் *5–00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–25 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

– – – – –

பிற்பகல் 5–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப தனபால்** *அவர்கள் தலைமையில் பிற்பகல் 5–00 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.*

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் தொடர்ச்சி. மாண்புமிகு உறுப்பினர் திரு. P. சின்னப்பன் அவர்கள்.

திரு. P. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தாய் இல்லாமல் நாம் இல்லை; தாயின் ஆசி உள்ளவரை வெல்ல எவரும் பிறந்ததில்லை; என்றும் நம்மைக் காக்கின்ற அந்தத் தாய் இல்லாமல் நாம் இல்லை; மேக வீதியாக இருப்பார்கள்; எங்கள் உயிர் மூச்சினிலே கலந்து விட்டார்கள்; ஆதியும் அந்தமும் எங்களுக்குத் தாய்தான்; எம்மை ஆளும் நீதியும் அவர்கள்தான்; என்றும் தீய சக்தியை அழிக்கும் ஆற்றலைக் கொடுப்பார்; அவர்தான் எங்கள் புரட்சித் தாய். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் தர்ம வாழ்வை சூது கவ்வும் போதெல்லாம் அதர்மத்தை அழித்து மீண்டும் எங்களை வெற்றி பெற வைப்பார்கள். வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும் தங்கத் தலைவி அவர்களுக்கு முதல் வணக்கம்.

அன்பு நாடி, அது சிறக்க பண்பு நாடி, தமிழ் மக்களின் முன்னேற்றம் நாடி அதற்காக நித்தம் உழைப்பு நாடி, நித்தம் அம்மாவின் புகழ் பாடி, அவர்தம் ஆசியோடு எதிரிகளை ஆக்கிடுவார் தவிடுபொடி. நல் ஆளுமை திறனாளி என்ற பெருமை சூடி, எட்டுத் திக்கும் தமிழ் மாநிலச் சிறப்பு பாடி, எங்களை வழிநடத்தும், குடிமராமத்து நாயகர், இரண்டாம் கரிகால் சோழன், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)